# வவுனியா மாவட்டத்தின் வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவில் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் கால மற்றும் இட ரீதியான பாங்கு (2005 – 2022)

**கோபினா, எம்., பத்மநாதன், பி.,இராஜசூரியர், எல்.டி.**
புவியியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kobikobina2@gmail.com

*வவுனியா மாவட்டத்தின் வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகப்பிரிவில் 2005 2022 வரையிலான காலப்பகுதியில் நாட்பட்ட சிறுநீரக நோயினால்* (CKDu) *பாதிக்கப் பட்டவர்களின் கால ரீதியான மற்றும் இட ரீதியான பாங்கினை கண்டறிதல் ஆகிய நோக்கத் தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் பற்றிய தரவுகள் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையின் ஆண்டறிக்கைகள் மற்றும் வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலக ஆண்டறிக்கை ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டன. மொத்த நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களில் (எண்ணிக்கை - 691) பால் மற்றும் வயது வேறுபாடுகளின் அடிப்படையில் 50 வீதமான நோயாளர்கள் (எண்ணிக்கை - 346) தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். நோயாளர்களின் வாழ்வாதார நடவடிக்கைகள், உள்நாட்டு இடப்பெயர்வுப் போக்குகள், உணவுப்பழக்கங்கள், ஏனைய நோய்கள், ஏனைய பழக்கவழக்கங்கள் (மதுபாவனை, புகைப்பிடித்தல்) போன்றன முதல்நிலைத் தரவுகளாக வினாக்கொத்துபட்டியல்* (schedule) *மூலம் பெறப்பட்டன. அடையாளம் காணப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் பரம்பல் பற்றிய இடம்சார், காலம்சார் படங்களானவை* Arc GIS 10.4 *மென்பொருள் மூலம் உருவாக்கப்பட்டன. கால ரீதியான போக்கின் படி இப் பிரதேசத்தில் 2002 2009 வரையில்* CKDu *நோயாளர்கள் குறைவாக காணப்பட்டனர்கள் ஆயினும் 2010இன் பின்னர் படிப்படி யாக இந்நோயாளர்களின் அதிகரித்த போக்கு காணப்பட்டது. மொத்த நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் 31 வீதமான நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் 61 - 70 வயதுப்பிரிவினராக காணப்பட்டனர். ஆண் நோயாளர்களின் வீதம் 74 ஆகவும் பெண் நோயாளர்கள்* 26%*மும் காணப்பட்டனர். இப்பிரதேச செயலகப்பிரிவில் 19 கிராம சேவகர் பிரிவுகளில் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டார்கள். இந்நோயாளர்களில் அதிகள வானோர் ஆண்டியாபுளியங்குளம் கிராம சேவகர் பிரிவில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளார்கள். பெரியதம்பனை கிராமசேவகர் பிரிவில் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் இது வரையிலான காலப்பகுதியில் அடையாளப்படுத்தப்படவில்லை. இப்பிரதேச செயலகப்பிரிவில் அடையாளம் காணப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களில்* 96% *ஆனவர்கள் நிரந்தர வதிவிடமாக இப்பிரதேச செயலகப்பிரிவினைக் கொண்டவர்களாக காணப்பட்டனர்.* CKDu *நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 82 வீதமானவர்கள் விவசாயம் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளினை மேற்கொண்டவர்களாகவும், இதில்* 67% *ஆனவர் கள் நெற்பயிர்ச்செய்கையினை பிரதான பயிராக பயிரிடுபவர்களாகவும் காணப்பட்டார்கள். இந்நோயாளர்களில் 93 வீதமானவர்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களினை நுகர்பவர்களாக காணப்பட்டார்கள். இந்நோயிற்கும் அதிகரித்த போக்கிற்குமான தொடர்புகள் புவி இரசாயனவியல் ஆய்வுகள், மருத்துவ ஆய்வுகள் மூலம் அடையாளப்படுத்தப்பட வேண்டிய தேவை இப்பிரதேச செயலகப்பிரிவிற்கு காணப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** நாட்பட்ட சிறுநீரக நோய் நோய்த்தாக்கம், நோயாளர்கள், வெங்கல செட்டிக்குளம், வவுனியா